# பாடம் 5: காணப்படாத உலகம்

**விசுவாசத்தைக் கற்பிப்போருக்கான அறிவுறுத்தல்**

| | |
|---|---|
| அடிப்படை நிலை (7 வயது) | : 1 முதல் 7 கருத்துகளைக் கற்பிக்கவும் |
| இடைப்பட்ட நிலை (10 வயது) | : 1 முதல் 7 கருத்துகளைக் கற்பிக்கவும் |
| மேம்பட்ட நிலை (13 வயது) | : 1 முதல் 12 கருத்துகளைக் கற்பிக்கவும் |

**முந்திய பாடத்தில் இருந்து மீள்பார்வை:**
முந்திய பாடத்தில், நிறைவான அன்பின் ஒன்றிப்பாக அறியப்படும் தூய திரித்துவமாக கடவுள் இருக்கிறார் என்பதை நாம் கற்றோம். இந்த பாடத்தில், கடவுள் தமது சொந்த ஒன்றிப்புக்கு வெளியே, தமது மாபெரும் வழிந்தோடும் அன்பை தமது படைப்புடன் பகிர்வதற்காக படைத்த உயிரிகளைப் பற்றி நாம் கற்போம். அவர் காணப்படும் உலகைப் படைக்கும் முன்பாக காணப்படாத உலகைப் படைக்கத் தொடங்கினார்.

**தற்போதைய பாடம்:**
1. இருத்தல் என்பது படைப்பின் வரலாற்றோடு தொடங்குவதில்லை. இருத்தல் படைப்புக்கு முந்தியது. அது கடவுளோடு தொடங்கியது, அவர் காலத்துக்கும் வெளிக்கும் முன்பே இருக்கிறார். நித்தியத்திலேயே, தந்தை, மகன், மற்றும் தூய ஆவியாரின் ஒன்றிப்பில் தூய திரித்துவம் இருக்கிறது.

2. கடவுள் நிறைவான அன்பின் ஒன்றிப்பாக இருக்கிறார், மேலும் தமது படைப்போடு தமது அன்பைப் பகிரவே இந்த பிரபஞ்சத்தைப் படைக்க அவர் தீர்மானித்தார். படைப்பு கடவுளைத் திரும்ப அன்பு செய்வது கடவுளுக்குத் தேவையற்றது, ஏனெனில் அவரில் ஏற்கெனவே உள்ள அவரது அன்பே போதுமானது. எனினும், அவர் தமது அன்பைப் பகிர்ந்திட ஆசை கொண்டார், ஏனெனில் கடவுளின் அன்பு தற்கொடுத்தலாய் இருக்கிறது.

3. கடவுள் இயல்பான உலகத்தை (காணப்படும் உலகம்) படைக்கும் முன்பு, அவர் ஆவி உலகத்தை (காணப்படாத உலகம்) படைத்தார். கடவுள் முதலில் வானதூதர்களைப் படைத்த பொழுது, அவர் அவர்களைத் தன்விருப்பத்தின் கொடையோடு சுத்த ஆவிகளாகப் படைத்தார். வானதூதர்கள் இயல்பிலேயே நல்லவர்களாகப் படைக்கப்பட்டனர், ஆனால் அவர்களின் "கண்கள்" தானாகவே பேறுநிறை காட்சிக்கு (அதாவது விண்ணகத்தின் முழு அனுபவத்திற்கு) திறக்கவில்லை. அவர்கள் கடவுளை அன்பு செய்யவும், அவரை அறியவும், மேலும் அவரது விருப்பம் மற்றும் நோக்கத்திற்கு சேவை செய்யவும் படைக்கப்பட்டனர்.

கதிம 329: "'புனித அகுஸ்தீன் கூறுகிறார்: "'வானதூதர்' என்பது அவர்களது அலுவலின் பெயர். நீங்கள் அவர்களது இயல்பின் பெயரைத் தேடினால், அது 'ஆவியாக' இருக்கிறது; நீங்கள் அவர்களது அலுவலின் பெயரைத் தேடினால், அது 'வானதூதராக' இருக்கிறது: அவர்கள் என்னவாக இருக்கிறார்கள் என்றால் 'ஆவியாக', அவர்கள் என்ன செய்கிறார்கள் என்றால் 'வானதூதராக.'" அவர்களின் முழுமையில் வானதூதர்கள் என்போர் கடவுளின் பணியாளர்களாகவும் தூதுவர்களாகவும் இருக்கின்றனர். ஏனெனில் அவர்கள் 'எப்பொழுதும் விண்ணகத்தில் இருக்கின்ற என் தந்தையின் முகத்தைக் காண்போராய் இருக்கின்றனர்', அவர்கள் 'அவரது வார்த்தையைச் செயலாக்கும் வலிமையுள்ளவர்கள், அவரது வார்த்தையின் குரலுக்குச் செவிசாய்க்கின்றனர்'."

கதிம 330: "சுத்தமான ஆவிநிலை படைப்புயிரிகளாக வானதூதர்கள் நுண்ணறிவும் விருப்பமும் கொண்டுள்ளனர்: அவர்கள் ஆள்சார்ந்த அழிவற்ற படைப்புயிரிகள், நிறைவினில் அனைத்து காணப்படும் படைப்புயிர்களையும் கடந்தவர்கள், அவர்களது மாட்சியின் பேரொளி இதற்கு சான்று பகர்கிறது."

4. புனித தாமஸ் அக்குவினாஸ் (வானதூதரிய மறைவல்லுநர், 13ஆம் நூற்றாண்டு), கடவுளின் திட்டத்தில் வானதூதர்கள் தங்களின் நுண்ணறிவு மற்றும் தங்களின் இடத்திற்கு ஏற்ப ஒன்பது வேறுபட்டக் குழுக்களைச் சார்ந்துள்ளனர் என்று கற்பிக்கிறார்.

உயர்நிலை குழுவின் வானதூதர்கள் - செராபீன்கள், கெருபுகள், மற்றும் அரியணையாளர்கள் - கடவுளை நேரடியாகப் பார்த்து ஆராதிப்போர், முழுவதும் அவரில் கவனம் செலுத்துவோர். அவரிலே, படைப்பு அனைத்தின் மூலத்தை, அனைத்து படைப்பும் வெளிவந்த உச்சநிலை சிந்தனைகள் மற்றும் காரணங்களை அவர்கள் தியானிக்கின்றனர். மற்ற வார்த்தைகளில் கூறினால், கடவுளை அவரது மேலான நிறைவினில் அவர்கள் தியானிக்கின்றனர். செராபீன்கள், அதாவது ‘‘பற்றியெரிவோர்’’, கடவுளுக்கான அன்பில் மிகவும் ஆழமாகச் ‘‘சுடர்வீசுகின்றனர்’’ மேலும் அனைத்து வானதூதர்களிலும் அவரை மிகவும் தெளிவாகப் புரிந்து வைத்துள்ளனர். கெருபுகள், அதாவது ‘‘ஞானத்தில் முழுமையானோர்’’, கடவுளின் இறை பராமரிப்பு மற்றும் அவரது படைப்புயிரிகளுக்கானத் திட்டத்தைத் தியானிக்கின்றனர். அரியணையாளர்கள், இறை நீதி மற்றும் தீர்ப்பிடும் ஆற்றலை அடையாளப்படுத்துகின்றனர், கடவுளின் வல்லமை மற்றும் நீதியைத் தியானிக்கின்றனர்.

இரண்டாம் குழுவின் வானதூதர்கள் - ஆதிக்கர்கள், அறவாளர்கள், மற்றும் வல்லமைகள் - உயர்நிலை குழுக்களைப் போன்று ஒரே விதமான ஒன்றுபட்ட நோக்கம் கொண்டிருக்கவில்லை. அனைத்தும் தளிர்க்கின்ற மெய்மையை, பிரிக்கப்பட்ட அடிப்படை காரணங்களாக அவர்கள் காண்கின்றனர். பிரபஞ்சத்திற்கான கடவுளின் பராமரிப்புத் திட்டத்தை அவர்கள் நிறைவு செய்கின்றனர். ஆதிக்கர்கள், இவர்களின் பெயர் அதிகாரத்தைக் குறிக்கிறது, வானதூதர்களின் தாழ்ந்த குழுக்களை ஆளுகின்றனர். அறவாளர்கள், இவர்களின் பெயர் உண்மையில் ஆற்றல் அல்லது வலிமையைக் காட்டுகிறது, ஆதிக்கர்களின் ஆணைகளைச் செயல்படுத்தி விண்ணகப் பொருட்களை ஆளுகின்றனர். இறுதியாக, வல்லமைகள் கடவுளின் பராமரிப்புத் திட்டத்தை எதிர்க்கும் தீய சக்திகளுக்கு எதிராக முன்னின்று சண்டையிடுகின்றனர்.

மூன்றாம் குழுவினர் - ஆட்சியாளர்கள், அதிதூதர்கள், தூதர்கள் - அனைத்தின் பெரிய மற்றும் அடிப்படை காரணங்கள் முதல் பலவகையான குறிப்பட்ட காரணங்கள் வரை பிரபஞ்சத்தின் கூடுதலான பிரிக்கப்பட்ட உண்மை குறித்தப் புரிதலைக் கொண்டுள்ளனர். அவர்கள் மனித விவகாரங்களில் நேரடியாகத் தலையிடுகின்றனர். ஆட்சியாளர்கள் மண்ணக ஆட்சிப்பகுதிகளை, நாடுகள் அல்லது நகர்கள் போன்றவற்றைக் கவனிக்கின்றனர். அதிதூதர்கள் கடவுளின் முக்கியத் தகவல்களை மனிதகுலத்துக்கு வழங்குகின்றனர், இன்னும் ஒவ்வொரு தூதரும் நம் ஒவ்வொருவருக்கும் காப்பாளராகச் சேவை புரிகின்றனர்.

உயர்நிலை குழுக்களின் தூதர்கள் தாழ்நிலை குழுவினருக்கு ஒளியூட்டுகின்றனர், தங்களின் நுண்ணறிவு மற்றும் புரிதலை அவர்களோடு பகிர்ந்து கொள்கின்றனர், அதனால் உண்மையில் அங்கு வானதூதர்களுக்கு நடுவே உண்மையான தொடர்பு நிகழ்கிறது என்றும் புனித தாமஸ் கற்பிக்கிறார். இவ்விதத்தில் கடவுள் அவர்களுக்கு கொடுத்த எய்துபணியை நிறைவுசெய்ய வானதூதர்கள் ஒருவர் மற்றவரோடு ஒத்துழைக்க முடியும்.

5. வானதூதர்களை விட சற்றுத் தாழ்ந்தவர்களான மனிதர்களைத் தாம் படைக்கப்போவதாக கடவுள் வானதூதர்களிடம் வெளிப்படுத்தினார். மனிதர்களைத் தம்மோடு ஒன்றிணைக்க, தமது இறை வாழ்வை மனிதகுலத்தோடு பகிரும் விதமாக ஒரு நாள் தாமும் மனிதராகும் எண்ணம் உள்ளதாகவும் அவர் வெளிப்படுத்தினார். இது மனிதகுலத்தை வானதூதர்களை விட மிகவும் உயர்ந்ததாக ஆக்கும்.

6. இந்த வெளிப்பாடு வானதூதர்கள் நடுவே பொறாமையைத் தூண்டியது (சாலமோனின் ஞானம் 2:24), கடவுளால் படைக்கப்பட்ட சுத்த ஆவிகளில் மிகவும் அழகான லூசிபர், ஒரு கிளர்ச்சியை (‘‘சேவை செய்யமாட்டோம்!’’) தூண்டினான். லூசிபர் (அவனது பெயருக்கு ‘‘ஒளியைத் தாங்குகிறவன்’’ என்று பொருள்) ஒரு செராபீன், அவனது கிளர்ச்சியின் காரணமாக அவனது அழகிய ஒளி இருளாக மாறியது. புனித தாமஸ் அக்குவினாஸ் கூறுகிறார், அவன் விண்ணகத்தில் மூன்றில் ஒரு பங்கு வானதூதர்களை வீழ்ச்சியுறச் செய்தான் (திருவெளிப்பாடு 12:4). அவர்கள் கடவுளின் திட்டத்தை எதிர்த்து கிளர்ச்சி செய்ததால், அவர்கள் அனைவரும் மண்ணகத்திற்குத் தள்ளப்பட்டனர் (திருவெளிப்பாடு 12:9). இவ்வேளையில், கடவுளுக்கு ஒத்துழைக்க விரும்பிய வானதூதர்களுக்கு பேறுநிறை காட்சியின் கொடை கொடுக்கப்பட்டது.

7. கடவுள் மனிதகுலத்தைப் படைத்தப் பிறகு, சாத்தான் (கடவுள் படைத்த அனைத்து வானதூதர்களிலும் உயர்ந்தவன் ஆனால் வீழ்ச்சியுற்றவன்) மனிதகுலம் வீழ்ச்சியுறச் செய்தான் (தொடக்க நூல் 3:1-24). சாத்தான், மற்ற அனைத்து வீழ்ச்சியுற்ற வானதூதர்களோடு (அலகைகள் அல்லது பேய்கள் என்றும் அழைக்கப்படுகின்றனர்) சேர்ந்து, ஆன்மாக்களின் அழிவுக்காக ஒரு ‘‘கர்ச்சிக்கும் சிங்கம்’’ போன்று உலகில் திரிகின்றான் (1 பேதுரு 5:8).

அந்த வீழ்ச்சியுற்ற வானதூதர்கள் இறுதி தண்டனைக்காகக் காத்திருக்கும் இவ்வேளையில், மனிதர்களை அழிக்க மண்ணகத்தைச் சுற்றி அலைகின்றனர்.

8. திருச்சபை தந்தையர் மறைநூலின் இந்த பத்திகள் சாத்தானின் வீழ்ச்சியை விவரிப்பதாக மரபுவழியே கருதுகின்றனர்:

**எசாயா 14:12-15:** “வைகறையின் மகனாகிய விடிவெள்ளியே, விண்ணகத்தில் இருந்து நீ எப்படி வீழ்ந்தாய்? மக்களினங்களை வென்றவனே, நீ எப்படி தரையில் தூக்கி வீசப்பட்டாய்? உன்னைப் பற்றியே நீ எண்ணிக் கொண்டாய்: ‘நான் விண்ணகத்தை அளப்பேன்; கடவுளின் விண்மீன்களை விட உயரமாக எனது அரியணையை அமைத்துக் கொள்வேன். வடக்கிற்கு வெகுத் தொலைவில் உள்ள கூடுகையின் மலைமேல் நான் அமர்வேன். மேகங்களுக்கு மேலாக நான் உயரமாக ஏறுவேன், நான் உன்னதருக்கு ஒப்பாவேன்.’ தற்போது படுகுழியின் ஆழங்களுக்குள் பாதாளத்திற்கு நீ கீழே எறியப்பட்டாயே!”

**எசேக்கியேல் 28:12-19:** “மானிட மகனே, தீரின் அரசனுக்கு ஒரு புலம்பலை எழுப்பு. அவனிடம் கூறு, ‘ஆண்டவராகிய யாவே கூறுவது இதுவே: நீ நிறைவின் மாதிரியாகவும், ஞானத்தின் முழுமையாகவும், அழகின் நிறைவாகவும் இருந்தாய்; கடவுளின் தோட்டத்தில், ஏதேனில் நீ இருந்தாய். அனைத்து விதமான ரத்தினமும் உனது மேலங்கியை உருவாக்கின: பதுமராகம், புட்பராகம், வைரம், பளிங்கு, கோமேதகம், படிகப்பச்சை, நீலம், மாணிக்கம், மரகதம், மேலும் உனது காதணிகளும் மினுங்கல்களும் தங்கத்தால் உருவாக்கபட்டிருந்தன; அனைத்தும் நீ படைக்கப்பட்ட நாளிலேயே தயாராய் இருந்தன. காக்கின்ற ஒரு கெருபாக நான் உன்னைத் திருப்பொழிவு செய்தேன், கடவுளின் தூய மலைமேல் நீ இருந்தாய்; அழற்சிவந்த கற்கள் நடுவே நீ நடந்தாய். நீ படைக்கப்பட்ட நாள் முதல் உன்னில் முதலில் கயமை தோன்றியது வரை உனது நடத்தை மிகச்சிறந்ததாக இருந்தது, உனது மும்முரமான வணிகம் உன்னை வன்முறையாலும் பாவத்தாலும் நிரப்பியது. கற்களின் நடுவிலிருந்து காக்கின்ற கெருபே, நான் உன்னை கடவுளின் மலையில் இருந்து உன்னை கீழே தூக்கி வீசி உன்னை அழித்தேன். உனது அழகால் உனது இதயம் செருக்கில் வளர்ந்தது, உனது பேரொளியால் உனது ஞானம் சிதைந்தது. நான் உன்னைத் தரையில் வீசினேன்; நான் உன்னை அரசர்களுக்கான காட்சிப்பொருள் ஆக்கினேன். உனது மிகுந்த எண்ணிக்கையான குற்றங்களாலும், உனது வணிகத்தின் நேர்மையின்மையினாலும், நீ உனது திருவிடத்தைத் தீட்டுப்படுத்தினாய். ஆகவே உன்னை விழுங்க உன்னில் இருந்து நான் தீயைக் கொணர்ந்தேன்; உன்னைப் பார்த்தோரின் கண்கள் முன்பாக நான் உன்னைத் தரையில் சாம்பலாக்கினேன். உன்னை அறிந்த மக்களினங்கள் அனைத்தும் உனது விதியால் திகைத்து நிற்கின்றனர். நீ ஒரு திகிலூட்டும் பொருளாக இருக்கிறாய்; என்றென்றும் இருக்கவே மாட்டாய்.’”

9. கத்தோலிக்கத் திருச்சபையின் மறைக்கல்வி இந்த வீழ்ச்சியுற்ற வானதூதர்களைப் பற்றி நமக்கு சில முக்கிய உண்மைகளைச் சொல்கிறது:

கதிம 391: “கடவுளுக்கு எதிரான மயக்கும் குரலுக்குச் செவிமடுத்து நமது முதல் பெற்றோர் கீழ்ப்படியாமையைத் தெரிவுசெய்த பிறகு, அது அவர்களைப் பொறாமையில் இருந்து சாவுக்கு வீழ்ச்சியுறச் செய்தது. மறைநூலும் திருச்சபையின் மரபும் இதில், ‘சாத்தான்’ அல்லது ‘அலகை’ என்று அழைக்கப்படும் வீழ்ச்சியுற்ற வானதூதரைக் காண்கின்றன. கடவுளால் உருவாக்கப்பட்ட ஒரு நல்ல வானதூதராக முதலில் சாத்தான் இருந்தான் என்று திருச்சபை கற்பிக்கிறது: ‘அலகையும் மற்ற பேய்களும் உண்மையில் இயல்பிலேயே நல்லவர்களாக கடவுளால் படைக்கப்பட்டனர், ஆனால் அவர்கள் தங்கள் சொந்த செயலால் தீயோராயினர்.’”

கதிம 392: “இந்த வானதூதர்களின் ஒரு பாவம் குறித்து மறைநூல் பேசுகிறது. இந்த ‘வீழ்ச்சி’ இந்த படைக்கப்பட்ட ஆவிகளின் விருப்பத் தெரிவை உள்ளடக்கியது, அவர்கள் கடவுளையும் அவரது ஆட்சியையும் தீவிரமாகவும் திரும்பப்பெற முடியாததாகவும் புறக்கணித்தனர். இந்த கிளர்ச்சியின் பிரதிபலிப்பை நமது முதல் பெற்றோரிடம் சோதித்தவன் கூறிய வார்த்தைகளில் நாம் காண்கிறோம்: ‘நீங்கள் கடவுளைப் போல் ஆவீர்கள்.’ அலகை ‘தொடக்கத்தில் இருந்தே பாவம் செய்துவருகிறது’; அவன் ‘ஒரு பொய்யனும் பொய்களின் தந்தையுமாக இருக்கிறான்.’”

கதிம 393: “அது அவர்களது தெரிவின் திரும்பப்பெற முடியாத பண்பாக இருக்கிறது, மேலும் முடிவற்ற இறை இரக்கத்தின் ஒரு குறைபாடு அன்று, அதனால் வானதூதர்களின் பாவம் மன்னிக்கப்பட முடியாததாகிறது. ‘மனிதர்களின் இறப்புக்குப் பிறகு எந்த மனந்திரும்பலும் இல்லாதது போன்று, வானதூதர்களின் வீழ்ச்சிக்குப் பிறகு அவர்களுக்கு எந்த மனந்திரும்பலும் இல்லை.’”

10. வானதூதர் செய்த தெரிவு திரும்பப்பெற முடியாததாக இருந்தது, கடவுளை எதிர்ப்பதைத் தெரிவு செய்தோருக்கு எந்த மனந்திரும்பலும் இல்லை (கதிம 393). இந்த சுத்த ஆவிகளுக்கு எந்த மனந்திரும்பலும் இல்லை, ஏனெனில் தங்கள் கிளர்ச்சியின் விளைவுகள் குறித்த முழு அறிதலில் அவர்களின் தெரிவு இருந்தது, ஆகவே அவர்கள் தங்களது தீர்மானத்தை மாற்றத் தகுந்தவர்களாக இருக்கவில்லை; மற்ற வார்த்தைகளில், அவர்கள் செய்த தெரிவுகளை மாற்ற அவர்களாக ஒருபோதும் விரும்பவில்லை.

11. வீழ்ச்சியுற்ற வானதூதர்கள் விண்ணகத்தில் இருந்து வெளியேற்றப்பட்டு மண்ணகத்திற்கு தள்ளப்பட்டனர் (திருவெளிப்பாடு 12:4). அவர்கள் ஆன்மாக்களை அழிவுக்கு கொணர்வதற்காக ஒரு “கர்ச்சிக்கும் சிங்கம்” போன்று உலகில் திரிகின்றனர் (1 பேதுரு 5:8). அந்த வீழ்ச்சியுற்ற வானதூதர்கள் இறுதி தண்டனைக்காகக் காத்திருக்கும் இவ்வேளையில், மனிதர்களை அழிக்க மண்ணகத்தைச் சுற்றி அலைகின்றனர்.

12. மனிதகுலத்திற்கு வீழ்ச்சியைக் கொணர்வதே, தற்போது பேய்கள் என்று அறியப்படும் வீழ்ச்சியுற்ற வானதூதர்களின் முதன்மையானத் திட்டமாகும். படைப்பின் நிறைவு மற்றும் மனிதர்களின் புனிதப்படுத்தலுக்காக கடவுள் தமது மகன் இயேசு கிறிஸ்துவில் செய்யத் திட்டமிட்ட அனைத்துக்கும் எதிராக அவர்கள் நிற்கின்றனர்.